## V.R. சேதுராம அய்யர் - வாய்ப்பாட்டு

கான கலாதர மதுரை மணி ஐயர் அவர்களின் முக்கிய சீடர். அவருடைய குரு குல வாசத்தால் ஏற்பட்டது இசையெனும் சுவாசம். இந்த விழாவின் கதாநாயகர் திரு GND. அவர்களுக்கு மட்டுமல்ல என் தாய்க்கும் இவர்தான் குரு. இந்தியா சுதந்திரம் வாங்கிய வருடம் இவர் இசைபள்ளியை துவங்கிய தருணம். வெங்கட்ரமண சங்கீத வித்யாலயத்தில் எண்ணற்ற இசைக் கலைஞர்களை வார்த்தெடுத்த பெட்டகம். தள்ளாத வயதிலும், தளராத இசை ஆர்வம். இசை வல்லுநர்களை வாழ்த்துவதில் தாராளம். அதனால் இவருக்கு சீடர்கள் ஏராளம். இராமர் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு எதிரியிடம் தங்கிவிடுவதைப்போல், இவரிடம் புறப்படும் இசை அம்பு இசை கேட்பவரிடமே தங்கி விடும். தற்கால இசை உலகின் பிதாமகர் திரு. V.R. சேதுராம அய்யர் அவர்களை வரவேற்கிறோம்.

## திரு. வேம்பு ஐயர்

மதுரை மணி ஐயர் அவர்களின் சீடர். அவருடன் பாடி வந்தவர். இசை உலகின் மாப்பிள்ளையாக கருதப்படும் மதுரை மணி அய்யர் குடும்பததிற்கே இவர் மாப்பிள்ளை. பத்மபூஷன் T.V. சங்கர நாராயணன் அவர்களின் தந்தை. தன் வாழ்நாள் முழுவதும் மதுரை மணி ஐயர் உடனிருந்து அவருக்கு சேவை புரிந்தார் என்பதே இவருக்கு உரிய தனி அடையாளம்.

## Professor T.R. சுப்பிரமணியம்- வாய்ப்பாட்டு

TRS என்று அன்போடு அனைவராலும் அழைக்கப்படும் இவர், 1951ம் வருடம் சென்னை இசைக்கல்லூரியில் முதன் மாணவராகத் தேர்ச்சி பெற்று, சங்கீத வித்வான் பட்டம் பெற்றார். முசிறி சுப்பிரமணியம் அவர்களின் முதன்மைச் சீடர் இவர். Pallavi King என்று அனைவராலும் புகழப்படுபவர். டில்லி பல்கலைழகத்தில் 30 வருடங்களாக இசைத் தொண்டாற்றி சமீபத்தில் ஓய்வு பெற்றார். உலகப் புகழ் வாய்ந்த ஆக்ஸ்போர்டு மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களில் இவரது இசை நிகழ்ச்சிகளும், இசைபற்றி இவர் ஆற்றிய அருமையான உரைகள் இன்றும் அனைவர்க்கும் உரைகல். உலகெங்கும் பரவியுள்ள காற்றில் இவர் இசை கலந்திருக்கும். இவர் பெருமை உணர்த்தி நிற்கும்.

கிருஷ்ண கான சபா அளித்துள்ள சங்கீத சூடாமணி விருது, அகில பாரதிய காந்தர்வ மகா வித்யாலயம் அளித்த சங்கீத மகாமகாபாத்யாயா விருதுகள் இவர் பெருமைக்கு சான்று. கோலாச்சி நிற்கும் இவர் செய்துள்ளார் இசை பற்றி பல ஆராய்ச்சி. சீடர்கள் இவர்க்கு ஏராளம். அதனால்தான், புகழ் என்றும் இவர்க்கு தாராளம்.

## திரு. S. நாராயண அய்யர் - வாய்ப்பாட்டு

1944 முதல் 1952 வரை ஜகந்நாத பக்த சபையில் இசை ஆர்வம் செலுத்தி, நுங்கம்பாக்கம் சங்கீத வித்யாலம், சத்குரு சங்கீத வித்யாலயம். சத்குரு தியாகராஜ ஸ்வாமி அகண்டம் போன்ற இசைச் சபைகளில் இவர் மிகவும் பிரபலம். இவர் தடம் பதியாத சபைகள் எங்கும் இல்லை.

## சங்கீத கலாநிதி உயர்திரு T.K. கோவிந்தராவ் அவர்கள் - வாய்ப்பாட்டு

இயற்கை கொஞ்சும் கேரள மாநிலத்தைச் சேர்ந்த இவர், சங்கீதகலாநிதி திருப்பாம்புரம் ஸ்ரீ சுவாமி நாதபிள்ளை மற்றும் திருமதி பிருந்தா அவர்களின் வழிகாட்டுதலில் சென்னை மத்திய கர்நாடக இசைக்கல்லூரியில் 1949ல் இசை பயிலத் துவங்கினார். 15 வருடங்களுக்கும் மேலாக பத்மவிபூஷன், சங்கீத கலாநிதி, இசைப்பேரறிஞர் முசிறி சுப்பிரமணிய ஐயர் அவர்களிடம் குருகுல வாசம் பயின்றுள்ளார். ஐந்து தலைமுறைகளுக்கும் மேல் தமிழ்நாடு இசைக் கல்லூரியில் பேராசிரியராகவும், அகில இந்திய வானொலியில் நிகழ்ச்சித் தயாரிப்பையும், தொகுப்பையும் கவனிந்து வந்துள்ளார். சங்கீத வித்வத் சபை உள்ளிட்ட எண்ணற்ற சபைகளுக்கு ஆலோசகராகவும் இருந்திருக்கிறார். உலகமெங்கும் பயணம் செய்து, பல தரப்பட்ட இசைக்கச்சேரிகள் நடத்தி, பல எண்ணற்ற இசைக்கலைஞர்களை உருவாக்கியுள்ளார்.

சங்கீதா கலாநிதி, சங்கீத சூடாமணி, அமெரிக்க அரசு வழங்கிய சங்கீத ரத்னாகரா உள்ளிட்ட எண்ணற்ற விருதுகள் இவரால் பெருமையடைந்துள்ளன. காஞ்சி காமகோடி பீடத்தின் ஆஸ்தான வித்வான் விருதும் இவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இசையின் மேன்மையை அகிலமெங்கும் தெரியப்படுத்த கானமந்திர் எனும் அமைப்பை நிறுவி, இசை பற்றிய புத்தகங்கள் மற்றும் ஒலிநாடாக்களை கானமந்திர் Studios என்ற நிறுவனத்தின் மூலமாக பரப்பி வருகிறார். மகாராஜா ஸ்வாதித் திருநாள் அவர்களின் இசைத்தொகுப்பினை அழகாக வடிவமைத்துள்ளது இவரது வாழ்நாள் சாதனை. பல தலைமுறைகளுக்கும் பயன்படும் விதத்தில் ரோமன்-தேவனகிரி இசை வடிவமைப்புகளை, ஆங்கில உச்சரிப்புகள் மற்றும் இசைக் குறிப்புகளை இவர் வடிவமைத்திருப்பது வியத்தகு சாதனையாகும்.

### திரு. K.R. சாரநாதன் - வாய்ப்பாட்டு

எங்கெல்லாம் இசையின் சுவாசம் இருக்கிறதோ, அங்கெல்லாம் இவரின் வாசம் இருக்கும். திரு, தேசிகனைப் போன்றே கானகலாதர மதுரை ஸ்ரீ மணி ஐயர் அவர்களின் சீடரான உயர்திரு. V.S. சேதுராமன் அவர்களிடம் இசை பயின்றார். சங்கீதத்தில் மட்டுமல்ல, தேசிகன் குடும்பத்திலும் இவர் ஐக்கியம். இந்தியா முழுவதிலுமுள்ள அனைத்து சபைகளும் இவருக்கு பரிச்சயம். வாழ்நாள் முழுவதும் இவர் தொடரும் என்பது நிச்சயம்.

தியாகையரின் பஞ்ச ரத்ன கீர்த்தனைகளை எண்ணற்ற இசைக்கலைஞர்களைக் கொண்டு அரங்கேற்றி வருவது இவரது வாழ்நாள் சாதனை. காஞ்சி காமகோடி பீடத்தின் ஆஸ்தான வித்வானாக சமீபத்தில் பொறுப்பேற்றிருக்கிறார். தியாகராஜ சங்கீத வித்யாலயத்தின் வளர்ச்சியில் இவரின் பங்கு மகத்தானது, இவரது பெருமனமே அதற்கு உரித்தானது.

### கரூர் D. கிருஷ்ணமூர்த்தி - வாய்ப்பாட்டு

மாயூரம் M.S. விஸ்வநாத ஐயர், மதுரை G.S. மணி உள்ளிட்ட வித்வான்களோடு இசை புரிந்துள்ள இவர், 15 வருடங்களுக்கும் மேலாக அகில இந்திய வானொலியின் பாடி வருகிறார். காஞ்சி காம கோடி பீடத்தின் ஆஸ்தான விருதினை பெற்றுள்ளார். கானகலா பரிபூரண விருது, இசைச் செம்மல் விருது, மற்றும் கலா பாரதி விருதினைப் பெற்றுள்ளார். 45 வருடங்கள் இசைப் பணியில், 20 வருடங்களுக்கும் மேலாக மாணவர்களுக்கு இசை பயிற்றுவித்துள்ளார்.

புதுக்கோட்டை கோபால கிருஷ்ண பாகவதர், ஸ்வாமி கிரிதாஸ் கிரி உள்ளிட்ட பெரியோர்களின் ஆசியுடன், நாம சங்கீர்த்தனைங்களை பாடி அனைவரையும் மகிழ்வித்து வருகிறார்.

### விசாலுர் S. குருமூர்த்தி-வாய்ப்பாட்டு

செம்பை வைத்தியநாத பாகவதர், திரு ஸ்ரீவாஞ்சையம் மணி அய்யர், கடலூர் சுப்பிரமணியம், செம்பை ஸ்ரீ நாராயணன், ஸ்ரீ K.S. வாசுதேவன் பொன்ற இசை மேதைகளிடம் இசை பயின்றார். இவர் பாடாத சபைகளே இல்லை. அகில இந்திய வானொலி இவரின் இசையொலி ஒலித்துக்கொண்டேயிருக்கும். தனியார் மற்றும் சென்னை தொலைக்காட்சிகளிலும் இவர் பாடிக்கொண்டிருக்கிறார். இவை தவிர, இந்திய பாகிஸ்தான் இடையேயான கார்கில் போரில் இந்திய வீரர்களை உற்சாகப்படுத்திய இவரது பாரத கானம் என்ற ஒலிநாடா மிகவும் பிரபலம். பிரபல வயலின் மேதை திரு. குன்னக் குடி வைத்தியநாதன் அவர்களின் இசையில் தேவாரம் மற்றும் திருப்பாவை பாடல்களை ஒலிநாடாவாக வெளியிட்டுள்ளார்.

### சேந்தங்குடி ஜெயராமன் - வாய்ப்பாட்டு

சிறு வயதிலேயே பயிங்கநாடு ராஜகோபால ஐயர் அவர்களிடம் இசை பயிலத் துவங்கினார். இசையில் உயர் படிப்பு முடித்து, காயக பிரவீணா பயிற்சியில் 6 வருடம் பயின்று தேர்ச்சி பெற்றார். சங்கீத கலாநிதி ஸ்ரீ D.K. ஜெயராமன் அவர்களுடன் இணைத்து பல இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளார். ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமியின் அனைத்து

பிருந்தாவனங்களிலும் இவர் இசை நிகழ்ச்சி அரங்கேறியிருக்கிறது. தைப்பூசம், மற்றும் தமிழ்ப் புத்தாண்டு தினங்களில் இவரது இசை அரங்கேறாத கோயில்களே இல்லை. 1971 முதல் 1995 வரை திரு அருட்பா வழிபாட்டினை நிகழ்த்திய மற்ற திருத்தலங்களிலும் அதனை அரங்கேற்றியுள்ளார். நங்கநல்லூரில் அமைந்துள்ள சத்குரு தியாகராஜ ஆராதனை சபையின் மூலம் ஒவ்வொரு மாதமும் தியாகராஜ ஸ்வாமிகளின் பஞ்சரத்ன கீர்த்தனைகளை அரங்கேற்றுவது இவரது தனிச்சிறப்பு.

## சித்தூர் அப்பண்ண பாகவதர்

சிறு வயது முதலே இசையில் நாட்டம். வாய்ப்பாட்டு மட்டுமின்றி வயலின் இசையும் இவருக்கு ஓர் வரப்பிரசாதம். இசை இவரிடம் குடி பெயர்ந்ததும். இசைப் பேராசிரியராகவே சென்னையில் குடி பெயர்ந்தார். முக்கிய மாதங்களில் முக்கிய கலைஞர்களை வரவழைத்து, புரந்தரதாஸர் விழாவையும், தியாகராஜ ஸ்வாமிகள் விழாவையும் நடத்தி வருகிறார். இசையே தன் வாழ்வின் உயிர்நாடி என பெருமிதம் கொள்கிறார் இவர்.

## காஞ்சி ஜனார்த்தனன் - வயலின்

## திரு. N.V. சுப்பிரமணியன் - வயலின் இசைக்கலைஞர்

தாயின் கர்ப்பத்தில் இருக்கும்போதே கர்நாடக இசை இவரைக் கவர்ந்தது. பிரபல வயலின் இசை மேதைகளின் இசை நிகழ்ச்சிகளை இவர் கேட்க நேர்ந்தது. பின் வயலின் இசை இவர் சொத்தானது. உலகம் இவர் இசையால் பித்தானது. பிரபல இசை வித்தகர்கள் திருவெண்காடு ஜெயராமன், PT.R. சுப்பிரமணியன், ஸ்ரீ ராம லட்சுமண சகோதரர்கள் , மகாராஜபுரம் சந்தானம், சிக்கில் சகோதரிகள் உள்ளிட்ட இசைக்கலைஞர்களோடு இணைந்து இசை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார். இரயில்வே துறையில் பணி புரிந்தாலும், இவர் இசை வாழ்க்கை என்றும் தடம் புரளவில்லை. சென்னையிலுள்ள பிரபல இசை அமைப்புகளில் முக்கிய அங்கம் வகித்து இசையின் மகத்துவத்தை அனைவரும் அறிய அயராது பாடுபட்டு கொண்டிருக்கிறார்.

## திருவள்ளூர் V. பார்த்தசாரதி - வயலின் இசைக்கலைஞர்

திரு GND தேசிகனின் ஆஸ்தான வித்வான் இவர். வயலின் நரம்புகளில் இவர் கை வைக்கும் போதெல்லாம் நம் நரம்புகள் துடித்தெழும். இவருடைய தந்தையே இவருக்கு குரு. இவரது தந்தை சங்கீத மேதைகள் திருமதி. D.K. பட்டமட்மாள், திருமதி M.L. வசந்தகுமாரி அவர்களுடன் இசை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார். 35 வருடங்களுக்கு மேல் புகழ் பெற்ற இசைக்கலைஞர்களான திரு. டி.கே. ஜெயராமன், மறைந்த இசை மேதை மகாராஜபுரம் சந்தானம், புல்லாங்குழல் ரமணி, டி. இராஜம் ஐயர், மாண்டலின் ஸ்ரீநிவாஸ் , மதுரை சோமு, திரு. G.N. தேசிகன் உள்ளிட்ட இசைக்கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளில் இவரது வயலின் இசைதான் பிரதானமாக மட்டுமல்ல பிரமாதமானதும் கூட.11.8.1989 அன்று திருநெல்வேலியில் 28 மணி நேரங்கள் தொடர்ந்து வயலின் வாசித்து அன்றைய திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் தலைமையில் சாதனை புரிந்ததே இவரது இசைப்பணியில் ஒரு மணி மகுடம்.

## திரு. A.S. இரவிகுமார் - வயலின் இசை கலைஞர்

இந்திய இசைத்துறையில் முதுகலை பட்டம் பெற்றுள்ளார். அண்ணாமலை பல்கலைகழகத்தின் வாயிலாக சங்கீத பூஷணம் விருதைப் பெற்றுள்ளார். மதுராந்தகத்திலுள்ள அரசினர் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் இசைப் பேராசிரியராக பணி செய்து, உதவித் தலைமை ஆசிரியராக பதவி உயர்வு பெற்று, சமீபத்தில் ஓய்வு பெற்றுள்ள இவர் இன்றும் இசைப் பணி தொடர்கிறது.

திரு. R கைலாசம் - வயலின் இசைக்கலைஞர்

இசைக்கே இவர் குடும்பம் அர்ப்பணம். இவர் தந்தை திரு. ராம பாகவதர் புகழ்பெற்ற பாடகர். தந்தையிடமே வயலின் இசை பயின்றார். ஒரு வயலின் இன்னொரு வயலினை ஈன்றது. ஆம். Professor T.N. கிருஷ்ணன் அவர்கள்தாம் இவரின் குரு. 1962 முதல் வயலின் தனக்கென ஒரு தனி இடம் பிடித்துக்கொண்டார். மகாராஜபுரம் சந்தானம், ராம லட்சுமண சகோதரர்கள், திருமதி. சுதா ரகுநாதன், சீர்காழி சிவசிதம்பரம், ராதா ஜெயலட்சுமி உள்ளிட்ட இசைக் கலைஞர்களுக்கு இவர் ஒரு பக்கம்.

வானொலியிலும், தொலைக்காட்சியிலும் இவர் வாசிப்புகள் இருக்கும். அதில் நம் இரசனை வசிப்புகள் மிதக்கும். நாத ரத்தினம் என்று விருதினையும் இவர் பெற்றுள்ளார். 1981 முதல் 1990 வரை தொடர்ந்து 10 ஆண்டுகள் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு இளம் கலைஞர்களுக்காக தமிழகத்தில் பல்வேறு சபைகளில் இசை நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளார். இதுவரை 6000 த்திற்கும் மேற்பட்ட இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்று 45 வருட காலமாக இத்துறையில் சாதனை புரிந்து வருகிறார்.

மதுரை வ. ஸ்ரீநிவாசன் - மிருதங்கம்

5 வயது முதலே இசையின் குலத்தில் விளங்கிய மதுரை பாலகிருஷ்ண அய்யங்கார் மற்றும் சோழவந்தான் சேஷ அய்யங்கார் குருகுலம் பயின்றார். அரியக்குடி இராமானுஜ அய்யங்கார், திரு M.D. ராமநாதன், ராஜம் அய்யர், மதுரை T.N. சேஷ கோபாலன் உள்ளிட்ட பிரபல இசைக்கலைஞர்களுக்கு மிருதங்கம் வாசித்ததோடு, உலகமெங்கும் தனது மிருதங்க முத்திரையை இவர் பதித்துள்ளார். அகில இந்திய வானொலியின் வாத்ய விருந்தா இசை நிகழ்ச்சியில் எண்ணற்ற இயக்குநர்களோடு 18 வருடங்களுக்கும் மேல் பணிபுரிந்துள்ளார். வர்ணம், தில்லானா, கீர்த்தனம் லயம், உள்ளிட்டவற்றில் கணக்கிலடங்காத புதிதான இசைகளை உருவாக்கியுள்ளார். இது தவிர, இசைஞானி இளையராஜா அவர்களின் இயக்கத்தில் உருவான How to Name It, பண்டிட ரவி சங்கர் உருவாக்கிய Passages, , ஸ்ரீ தனஞ்செயன் அவர்கள் உருவாக்கிய Jungle Book உள்ளிட்ட இசைத் தொகுப்புகளிலெல்லாம் இவரது மிருதங்க இசை பிரதான இடம் பிடித்திருக்கும். தமிழக அரசு வழங்கிய கலைமாமணி விருது, சங்கீத வித்வத் சபை வழங்கியுள்ள வாக்கியக் காரா விருது உள்ளிட்ட விருதுகள் இவரின் உழைப்புக்கு கிடைத்த உன்னதங்கள்.

திரு. மேலக்காவிரி கிருஷ்ணமூர்த்தி - மிருதங்க இசை கலைஞர்

தனது 9வது வயதிலேயே மறைந்த திரு. இராகவ அய்யர் அவர்ளை குருவாகக் கொண்டு மிருதங்க இசை பயின்றார். பல்வேறு இசைக்கலைஞர்களுக்கு மிருதங்கம் வாசித்துள்ளார். 1956 முதல் அகில இந்திய வானொலி இவர் இசை பரப்பியது. இசை கேட்போர் தாகத்தை நிரப்பியது. 22 வருடங்களுக்கும் மேல் இந்தியாவிலுள்ள அனைத்து இசைத்துறை அமைப்புகளில் இவரது நிகழ்ச்சிகள் இடம் பெற்று வருகின்றன. தந்தை மகற்காற்றும் உதவியாக தன் திறமை தன்னுடனே நின்று விடாமல் தனது இரண்டு மகன்களையும் இசைத் துறையில் ஈடுபடுத்தியுள்ளார். அவர்களும், மகன் தந்தைக்காற்றும் உதவியாக ஒருவர் புகழ் பெற்ற மிருதங்க வித்வானாகவும், மற்றொருவர் சிறந்த வயலின் வித்வானாகவும் விளங்கி வருகிறார்கள்.

திரு. நாகை சௌந்தரராஜன் - மிருதங்க இசைக் கலைஞர்

இவர் என் குரு. கலியுகத்தின் நந்தி பகவான். தனது 13 வயதிலேயே மிருதங்க மேதை திரு. திண்ணியம் வெங்கட்ராமன் அவர்களிடம் மிருதங்கம் கற்கத் தொடங்கிய இவர், 22வயது முதற்கொண்டு இசை நிகழ்ச்சிகளில் வாசித்து வருகிறார்.

தனது 72வது வயதிலும் மிருதங்கம் வாசித்து வருகிறார். வயலின் வித்வான் சந்திரசேகர், ராம லட்சுமண சகோதரர்கள். தேரேழுந்தூர் சகோதரிகள். திரு. G.N. தேசிகன் உள்ளிட்ட பிரபல இசைக்கலைஞர்களுக்கு மிருதங்கம்

வாசித்து வருகிறார். 52 வருடங்களாக சென்னையில் திருவையாற்றில் நடைபெறும் உற்சவத்தைப் போலவே சென்னையிலும் தியாகராஜர் ஆராதனை விழாவை நடத்தி வருகிறார். 1970ம் அண்டு தமிழக ஆளுநரின் Best Junior Musician award பெற்றிருக்கிறார். கிருஷ்ண கான சபா பாலக்காடு மணி ஐய்யர் நினைவு பரிசையும் இவருக்கு வழங்கியுள்ளது. ஒவ்வொரு மாதமும் இவர் நடத்தும் பகுள பஞ்சமி இசைக்கச்சேரியை பல முன்னணி இசைக் கலைஞர்களைக் கொண்டு நடத்தி வருகிறார்.

## தஞ்சை S. சுப்பிரமணியன் - மிருதங்க வித்வான்

35 வருடங்களுக்கும் மேலாக அனைத்து இசைக் கச்சேரிகளிலும் பங்கேற்று வருகிறார். பிரபல சங்கீத வித்வான்கள் திரு. T.V. சங்கரநாராயணன், T.N. சேஷகோபாலன், K.V. நாராயணசாமி, நெய்வேலி சந்தானகோபாலன், டாக்டர் ஆ. பாலமுரளிகிருஷ்ணா, மறைந்த மாமேதை M.L. வசந்தகுமாரி உள்ளிட்டோருக்கு மிருதங்கம் வாசித்துள்ளார். அதோடு மட்டுமின்றி, புல்லாங்குழல் மேதை திரு. N. ரமணி, வயலின் M.S. கோபாலகிருஷ்ணன், மாண்டலின் திரு. ஸ்ரீநிவாஸ் உள்ளிட்டோரின் கச்சேரிகளிலும் இவரது இசை கேட்டுக்கொண்டேயிருக்கும். அனைத்து வெளிநாடுகளிலும் இவர் கச்சேரிகள் நடைபெற்றுள்ளன. தஞ்சை ஸ்ரீ உபேந்திரன் நினைவுப் பரிசு, ஸ்ரீரங்கம் Fine Arts விருது, ஸ்ரீ மகாராஜபுரம் சந்தானம் நினைவு விருது உள்ளிட்ட இவர் வாங்கிய விருதுகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். அகில இந்திய வானொலியின் முதல்நிலை கலைஞராகவும், தொலைக்காட்சிகளிலும் இவர் பங்கேற்று வருகிறர். தன் கலை தன்னோட நின்றுவிடாமல் மாணவர்களை பயிற்றுவிக்கிறார்.

## திருவிடைமருதூர் S. இராதாகிருஷ்ணன் - மிருதங்க வித்வான்

35 வருடங்களுக்கும் மேலாக கலைச்சேவை புரிந்து வரும் இவர், மாமேதை ஸ்ரீ மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர், மகாராஜபுரம் சந்தானம், மதுரை ஸ்ரீரங்கம் அய்யங்கார், ஸ்ரீ T.V. சங்கரநாராயணன், வயலின் மாமேதை T.N. கிருஷ்ணன், வீணை வித்வான் திரு. பாலசந்தர் உள்ளிட்டோருக்கு மிருதங்கம் இசைத்துள்ளார். மிருதங்கம் மட்டுமின்றி வாய்ப்பாட்டிலும் திறமை மிக்கவராக விளங்கும் இவருக்கு ஸ்ரீ காந்தி பாகவதர் குருவாக விளங்கியுள்ளார். இந்தியன் Fine Arts Society மூலம் சிறந்த மிருதங்க வித்வான் விருதை பெற்றது தன் வாழ்நாள் சாதனையாக இவர் கருதுகிறார்.

## வித்வான் திருச்சூர் மோகன்

## களக்காடு ஸ்ரீநிவாசன்

## கலைமாமணி திருமதி. சீதா துரைசாமி - ஜலதரங்கம்

அந்தரங்கமே பெண்கள் வாழ்க்கை எனும் நிலை மாற்றி, ஜலதரங்கமே தன் வாழ்க்கை என சிறுவயது முதலே இசையில் நாட்டம் கொண்ட இவர், மாஸ்ட்ரோ திரு ரமணய்யா செட்டியார் அவர்களின் மூலமாக ஜலதரங்க இசை பயின்றார். 1940-41ம் வருடம் சென்னை சங்கீத வித்வத் சபையின் மூலமாக இசை பயின்ற இவர், மாநிலத்திலேயே முதன்மையாக தேர்ச்சி பெற்று தங்க மெடல் விருதினை பெற்றார். அது மட்டுமின்றி, இந்த விருதினை பெறும் முதல் பெண்மணி என்பது குறிப்பிடத்தக்கது.

வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் ஜலதரங்கம் இசை ஒலித்துக்கொண்டேயிருக்கும். இவை தவிர, இவரது புகழை இந்து, தினமலர், குமுதம், மங்கையர் மலர் உள்ளிட்ட தமிழ் இதழ்களிலும், Deccan Herald, New York Times உள்ளிட்ட ஆங்கில நாளிதழ்களிலும் இவரது பேட்டிகள் இடம் பெற்றுள்ளன. 1990ளில் வட அமெரிக்காவைச் சேர்ந்த கர்நாடக இசைச் சம்மேளனம் ஆதரவில் மூன்று மாதங்கள் தொடர்ந்து அமெரிக்கா மற்றும் கனடாவில் இசை நிகழ்ச்சிகள்

தமிழக அரசின் கலைமாமணி விருதையும், காஞ்சி காமகோடி பீடம் வழங்கியுள்ள விருதையும், பெருமையாகக் கருதுகிறார். உலகில் தற்போது ஜரதரங்கம் இசையில் தனி இடம் பிடித்திருக்கும் ஒரே பெண்மணி இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## K.S. ரங்காச்சாரி - கஞ்சீரா

## சித்தூர் ஸ்ரீ வெங்கடேசன் - புல்லாங்குழல்

கண்ணனின் குழல் இவரது கையில். இவரது முன்னோர்கள் இசை விற்பன்னர்கள். சரபோஜி மன்னரிடமும், பீஜூர் சமஸ்தானத்தின் ஆஸ்தான வித்வானாகவும் விளங்கியுள்ளார்கள். 40 வருடங்களுக்கு மேல் இசைத்துறையில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டுள்ள இவர், 1975களில் இந்தியாவின் சார்பாக ரஷ்யா, செக்கோஸ்லோவேகியா, போலந்து, மேற்கு ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளில் இவரது இசைக்கச்சேரிகள் நடத்தியுள்ளார்.

1961ல் முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. இராதாகிருஷ்ணன் அவர்களிடமிருந்து விருது பெற்றுள்ளதை பெருமையாகக் கருதுகிறார். காஞ்சி காமகோடி பீடம் இவரை ஆஸ்தான வித்வானாகவும், வேணுகான மணி எனும் விருதினை வழங்கியும் கௌரவித்துள்ளது. வேணுகான லோலன், குழல் இசை மன்னன், நாதக் கனல் போன்றவை இவர் பெற்ற விருதுகள். தற்போதைய முதல்வர் மாண்புமிகு டாக்டர் J. ஜெயலலிதா அவர்களிடமிருந்து கலைமாமணி விருதினை பெற்றுள்ளார். அகில இந்திய வானொலியில் இவரது இசை நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். இந்துஸ்தானி இசை, நாட்டுப்புற இசை, கர்நாடக இசை, திரை இசை, பக்திப்பாடல்கள் போன்ற இசையை இவரது குழல் இசைப்பதே தனி ஆனந்தம்தான்.

## S. வெங்கட்ராமன் - தம்பூரா வித்வான்

இன்று இசைக்கருவிகள் எலக்ட்ரானிக் மயமாகி விட்டக காலத்திலும், கை வலிக்க இவர் தம்பூரா இசைத்தால்தான் பாடகரின் பாடல் உயிர் பெறும். உடற்பயிற்சி ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்ற இவர், 60 வருடங்களுக்கும் மேலாக அனைத்து வித்வான்களுக்கும் தம்பூரா இசைத்துள்ளார். 1982களில் வெளிநாடுகள் பலவற்றிற்கும் சென்று தம்பூரா இசைத்துள்ளார். ஸ்ரீ வீணை பாலசந்தர் இவரை தம்பூரா வெங்கட்ராமன் என அழைத்ததை பெருமையாகக் கருதுகிறார். சென்னையிலுள்ள அனைத்து சபாக்கள் மூலமாக பல விருதினை இவர் பெற்றுள்ளார். இவரது மகன் உமையாள்புரம் கல்யாணராமன் ஒரு சிறந்த மிருதங்கக் கலைஞர்.

தனிப்பட்ட பாராட்டுக்கள்

## M.B. வாசுதேவன்

இந்த மாபெரும் விழா மே மாதம் நடைபெற்றிருக்க வேண்டும். இன்று நடைபெறக் காரணம் ஒன்று உண்டு. இசைக்குள்ளே இன்று அடைபட்டு கிடக்கிறோம். ஆனால், இறைவனின் இதயத்துக்குள்ளே ஓர் ஆத்மா அடைபட்டுப் போனது. இவ்வுலகை விட்டு விடுபட்டுப் போனது. இந்த ஆத்மாவுக்கு இசை தெரியாது, இசையை ரசிக்கத் தெரியும். ரசிகன் கலைஞனை விட மேலானவன். அந்த மாபெரும் ரசிகக் கலைஞர்தான் திரு. வாசுதேவன்.

மதுராந்தகத்தில் விவாசயத் தொழில் நடத்தி, பின் சென்னையில் 24 வருடங்களுக்கும் மேல் நம் வித்யாலயத்துக்கு உழைத்து ஓய்ந்த மகாத்மா இந்த ஆத்மா. இந்த வித்யாலயத்தின் 25ம் ஆண்டுவிழா நடக்கவேண்டும். அதில்தான் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்ற கனவோடு வித்யாலயத்திலேயே அவர் உயர் பிரிந்தது. இன்று அவர் பிரிவு நமக்கும் புரிந்தது. இன்று, அவர் இன்றி கனவு நனவாகிக் கொண்டிருக்கிறது. ஆயினும் , இங்குதான் இந்தச் சபையில்

எங்கோ அவர் மனம் சுற்றிக்கொண்டிருக்கும். அவரின் ஆத்மா அனைவரையும் வாழ்த்தட்டும்.

வேம்பு சங்கரநாராயணன் - வாய்ப்பாட்டு

இவர் ஒரு முக்கிய புள்ளி. ஏனெனில், இவர் பயின்றது தியாகராஜ சங்கீத வித்யாலயப் பள்ளி. இவர் திருவிசைநல்லூரைச் சேர்ந்த உயர்திரு. வேம்பு ஐயர் என்ற உயர்ந்த சங்கீத வித்வான் அவர்களின் குமாரர். காயக கலாநிதி உயர்திரு. G.N. தேசிகன் அவர்களிடம் இசைபயின்று, 10 வருடங்களுக்கும் மேலாக இசைத் தொண்டு புரிந்து வருகிறார். திரு G.N. தேசிகன் அவர்களுடன் இணைந்து, பல்வேறு இசை நிகழ்ச்சிகளை நிகழ்த்தியுள்ளார். திரு. G.N. தேசிகன் அவர்களின் வலக்கரமாய் இருந்து, இந்நாள் வரை அவர் இசைப்பணி புரிய இவர் ஒரு முக்கிய காரணகர்த்தா எனலாம். இசை தன்னோடு நின்றுவிடாமல், தற்போதைய தலைமுறையினருக்கும் அதனை உணர்த்த வேண்டி அவர்களை இசை பயிற்றுவித்து ஊக்குவிக்கிறார்.

திரு. V.S. ஸ்ரீதர்

இவரும் 20 வருடங்களுக்கும் மேலாக தியாகராஜ சங்கீத வித்யாலயத்தில் முன்னேற்றத்தின் வெற்றிப்படிக்கட்டுகளில் இவருக்கும் பங்கு உண்டு.

திரு. பாரதி சுராஜ்

திரு. ஏ. சங்கரநாராயணன்